வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ———— ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 13.09.2025 சனிக்கிழமை | இதழ் : 256 | பக்கங்கள் : 08

# தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் இந்திய அரசு அதிகளவு அக்கறை!

## ரெலோவிடம் கூறினார் தூதுவர் சந்தோஷ் ஜா

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

கொழும்பு, செப்ரெம்பர் 13

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதும் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதும் சமாந்தரமாக செயல்படுத்தப்படுவது அவசியம். அதில் இந்தியா அதிக அக்கறையோடு இருக்கிறது என இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**




கொழும்பில் நேற்று ரெலோ தலைவர்களுடன் நடந்த சந்திப்பில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நேற்று வியாழக் கிழமை, கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் பிற்பகல் 2 மணிக்கு இச்சந்திப்பு நடைபெற்றது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலொவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனும், அக்கட்சியின் நிதிச் செயலாளரும் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரனும் இதில் கலந்து கொண்டனர்.

அதன்போது கடந்த 8ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 60 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தமிழர்களின் அபிலாஷைகளான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, நீதி, கௌரவம் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்கவேண்டும் என்று வலியுறுத்திய இந்தியாவின்

உறுதியான நிலைப்பாட்டை தாம் வரவேற்பதாக ரெலோ தலைவர் செல்வம் தெரிவித்தார்.

அரசியல் யாப்பை முழுமையாக 07

# கிணற்றில் தவறி விழுந்த வயோதிபப் பெண் மரணம்!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 13

வயோதிபப் பெண் ஒருவர் நேற்று கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் பகுதியை சேர்ந்த ராமமூர்த்தி சீதாலட்சுமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் நேற்று காலை கிணற்றில் தண்ணீர் எடுத்தவேளை தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப்படுத்தினர். (அ-05)

# பிறந்து 4 நாள்களேயான குழந்தை திடீரென பரிதாபமாக உயிரிழப்பு!

## நவாலிப் பகுதியில் துயரச் சம்பவம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 13

யாழில் பிறந்து நான்கு நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று நேற்று முன் தினம் பரிதாபமாக உயிரிழந்துள்ளது. நவாலி தெற்கு, மானிப்பாய் பகுதியை சேர்ந்த கவிநாத் பூஜிதா என்ற தம்பதிகளின் முதல் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை கடந்த 07ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறந்துள்ளது. இவ்வாறு பிறந்த குழந்தை நேற்று முன்தினம் திடீரென உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண 07

# புலிகளுடன் ஒன்றிணைந்து முஸ்லிம்களும் போராடினர்!

## சபையில் சுட்டிக்காட்டிய சிறிதரன் எம்.பி.

கொழும்பு, செப். 13

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் விடுதலைப் புலிகளோடு இணைந்து முஸ்லிம்களும் போராடியிருக்கின்றார். வீரச்சாவடைந்திருக்கிறார்கள். இவ்வாறு உள்ள பின்னணியில் தற்போது சில முஸ்லிம் சகோதரர்கள் விரோதப் போக்கை கொண்டு செயற் படுகின்றனர் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இதுவரை வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ்



மக்களுக்கு தாயகம் என்ற ஒன்று இருப்பதை வெளிப்படையாக கூறியதில்லை. 07

# அத்துரலிய ரத்ன தேரருக்கு பிணை

கொழும்பு, செப். 13

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அத்துரலிய ரத்ன தேரரை பிணையில் செல்ல அனுமதித்து நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று வெள்ளிக் கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட ரத்ன தேரரை தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகள் மற்றும் 10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 07

# கைதாகுவாரா கம்மன்பில?

கொழும்பு, செப். 13



முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவை கைது செய்வது குறித்து எந்த முடிவும் தற்போது எடுக்கப்படவில்லை என குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் கீழ் தன்னைக் கைது செய்ய சி.ஐ.டி. தயாராகி வருவதாகக் கூறி, தன்னைக் கைது செய்வதைத் தடுக்க உத்தரவிடக் கோரி உதய கம்மன்பில தாக்கல் செய்த ரிட் மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 07

# அரசின் இல்லத்தில் இருந்து 2 மாதத்தில் வெளியேறுவேன்

## கூறுகின்றார் சந்திரிகா

கொழும்பு, செப். 13

இரண்டு மாதங்களுக்குள் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை நீக்குவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதையடுத்து முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த 07

# மன்னார் காற்றாலை மின் திட்டம் ஜனாதிபதியின் அவகாசம் நிறைவு

## சாதகமான பதில் இன்றேல் பாரிய போராட்டம் வெடிக்கும் என்று மன்னார் மக்கள் எச்சரிக்கை

மன்னார், செப். 13

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் கோபுரங்கள் குறித்து துரித நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஒரு மாத காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், ஜனாதிபதியின் சாதகமான பதிலை தாம் எதிர்பார்த்துள்ளதாக மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் காற்றாலை,கனிய மண் அகழ்வுக்கு எதிரான போராட்டம் நேற்று 41 ஆவது நாளாக இடம்பெற்ற நிலையில் அங்கு இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர்



இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னாரில் முன்னெடுக்கப் படவுள்ள காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது 07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் சுகாதார சீர்கேடுடன் இயங்கிய இரு உணவகங்களுக்கு சீல்!

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி - முழங்காவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட நாச்சிக்குடா பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கும் 65,000 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன் இரண்டு உணவகங்களும் நேற்று முன் தினம் முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மேற்பார்வைப் பொது சுகாதார பரிசோதகர் றெனால்ட், பொது சுகாதார பரிசோதகர்களான ஜெனோயன், தளிர்ராஜ், தர்மிகன் ஆகியோர் இணைந்த குழு மேற்கொண்ட செயற்பாட்டில் இரு உணவகங்களும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை இனங்காணப்பட்டிருந்தது.



அதனையடுத்து குறித்த உணவகங்களுக்கு எதிராக முழங்காவில் பொது சுகாதாரப் பரி சோதகர் இ. தர்மிகனால் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைவாக கிளிநொச்சி நீதிமன்ற நீதவானால் இரு உணவகங்களுக்கும் 65,000 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டதுடன், சீர்கேடுகளை நிவர்த்தி செய்யும் வரை இரண்டு உணவகங்களையும் தற்காலிகமாக மூடுமாறும் கட்டளையிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா மாநகர சபை எல்லைக்குள் உணவகங்களில் புகைத்தலுக்கு தடை

வவுனியா, செப். 13

வவுனியா மாநகர சபைக்குட்பட்ட உணவகங்களுடன் இணைந்தவாறாக உள்ள புகைத்தல் பகுதிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் நேற்று முன்தின அமர்வின் போதே குறித்த உத்தரவை முதல்வர் சு. காண்டீபன் வழங்கியுள்ளார்.

குறிப்பாக வவுனியா நகரத்தில் உள்ள சில உணவங்களுக்கு பின்புறமாக புகைப்பிடிப்பதற்கென சிறிய பகுதிகள் காணப்படுகின்றன

இவ்வாறான பகுதிகளை உடன் தடை செய்யுமாறு மாநகர சுகாதார குழு பரிந்துரை செய்துள்ளதையடுத்து குறித்த உத்தரவை மாநகர முதல்வர் வழங்கியுள்ளார்.

அத்துடன் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்துக்கு முன்பாக பாடசாலை முடிவடையும் நேரத்தில் சிலர் போதைமாத்திரை வியாபாரத்தில் ஈடுபடுவதாக உறுப்பினர் க. கிருஸ்ணதாஸ் சுட்டிக் காட்டியிருந்தார். இதனை தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் உறுதியளித்தார்.

(எ-10)

# மோ.சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு!

## கிளிநொச்சியில் பரிதாப சம்பவம்

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புன்னைநீராவி பகுதியில் வசிக்கும் 40 வயதுடைய மோகனபவன் வனிதா என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 09 ஆம் திகதி உறவினருடன் மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு சென்ற பொழுது திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்துள்ளார்.

இந்நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தபோது சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# வரலாற்று சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரத்தில் புதிய தேர் இருப்பிடப் பணிக்காக அடிக்கல் நாட்டல்!





யாழ்ப்பாணம், செப். 13

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் தேவஸ்தானத்தில் புதிய தேர் இருப்பிடக் கட்டுமானப் பணிக்காக நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது.

41 அடி உயரம் கொண்ட பூசாந்திர சித்திரத் தேருக்கான புதிய தேர் இருப்பிடத்தின் கட்டுமான வேலைகளுக்காகவே நேற்றுக் காலை 9.30 மணிமுதல் 10 மணிவரை உள்ள சுபமுகூர்த்ததில் இவ்வாறு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதன்போது விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன.

(அ-05)

# பொன். சிவபாலனின் 27ஆம் ஆண்டு நினைவு



யாழ்ப்பாணம், செப். 13

யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான அமரர் பொன். சிவபாலனின் 27ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் நினைவு கூரப்பட்டது.

மூளாயில் அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் குடும்ப உறுப்பினர்கள் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ். மாநகரசபை நல்லூர் கல்யாண மண்டபத்தில் மாநகர போக்குவரத்து சம்பந்தமாக உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது கூரைமேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன் யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திர மோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ். நகர பிரிகேட் மேஜர் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ். மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலைப் பகுதிப் பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டட வரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரண்டு பேர் தாக்குதலில் கொல்லப்பட் டனர்.

பொன்.சிவபாலன் தமிழர் விடுதலைக் கூட்டணியினை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ். மாநகர சபையின் முதல்வராக பணியாற்றியதுடன் பிரபல சட்டத்தரணியுமாக விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# மன்னார் நகர சபையில் ஊழலில் ஈடுபட்டவர்கள் வெகுவிரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்!

## நகர முதல்வர் டானியல் வசந்தன்

மன்னார், செப். 13

மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊழல் குறித்த விசாரணைகள் மிக வேகமாக இடம் பெற்று வருகின்றது. விசாரணைக் குழுக்களும் வருகை தந்து விசாரணைகளை தொடங்கியுள்ளது. மிக விரைவில் ஊழல் மோசடியில் ஈடுபட்ட நபர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படும் நிலை ஏற்படும் என மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் நகர சபையினால் பல்வேறு விசேட தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மன்னாரில் ஞாயிறு தினங்களில் காலை முதல் பிற்பகல் 2 மணி வரை தனியார் வகுப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மன்னார் நகரத்தில் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக புதிய நடைமுறைகளை அமுல்படுத்துகின்றோம். போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக மன்னார் நகரத்தில் பஸ் போக்குவரத்து சபை மற்றும் தரிப்பிடத்தில் பல மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றோம். பல இடங்களில் ஒரு வழிச்சாலையாகவும், வாகனங்களை தரித்து நிறுத்துவதற்காக பல இடங்களை அடையாளப்படுத்தி இருக்கிறோம்.

மன்னார் நகர சபைக்குட்பட்ட காணிகளை துப்புரவு செய்து எல்லைப்படுத்துவதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

மேலும், மன்னார் நகரத்தில் எவ்வித மணல் அகழ்வுக்கு இடம்பெற அனுமதிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. எவ்விதத்திலும் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதில்லை என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகரத்தை சுத்தமாக வைத்திருப்பதற்காக எமது பஸ் தரிப்பு நிலையத்தில் வெற்றிலை எச்சில் துப்புதல், புகைத்தல், முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

பொது இடங்களில் சிறுநீர் கழித்தலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த விடயங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மன்னார் நகர சபையினால் இவ்விடயங்கள் குறித்து பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் கட்டுப்பாடுகளை விதிப்போம். மக்கள் குறித்த சட்டங்களை கடைபிடிக்கவேண்டும்.

மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊழல் குறித்து விசாரணைகள் மிக வேகமாக இடம் பெற்று வருகின்றது. விசாரணைக் குழுக்களும் வருகை தந்து விசாரணைகளை தொடங்கியுள்ளது.

ஆளுநர் அலுவலகத்தில் இருந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எமக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் இருந்து குழு ஒன்று வருகை தந்து ஆவணங்களை பரிசீலித்துச் சென்றுள்ளது.

மிக விரைவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படும் நிலை ஏற்படும். மன்னார் நகர சபைக்கு ஏற்பட்ட நட்டம் மீள கிடைக்கப்பெறும் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu ஈழநாடு
13.09.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 28

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள்

தேசிய மக்கள் சக்தி மேற்கொண்டு வரும் சில அதிரடியான மாற்றங்கள் சாதாரண மக்களால் வரவேற்கப்படும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. தேர்தல் காலத்தில் குறிப்பிட்டது போன்று சில விடயங்களை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். அதில் ஒன்றாகவே முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை இரத்துச் செய்யும் சட்ட மூலத்தை நிறைவேற்றியிருக்கின்றனர். ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் கொண்டுவரப்பட்ட இந்த நடைமுறையை தேசிய மக்கள் சக்தி மாற்றியிருக்கின்றது.

இதில் ஒரு விடயம் உண்டு. உண்மையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஓய்வுபெற்ற பின்னர் அமைதியான வாழ்வில் இருந்தார். அவர் ஒருபோதும் ஆட்சியிலேயோ அல்லது புதிய அரசாங்கங்கள் தொடர்பிலோ எந்தவொரு தலையீட்டையும் செய்ததில்லை. எனவே அந்த வகையில் ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கான சலுகை அவசியம் என்பதில் நியாயம் இருந்தது. ஆனால், அதன் பின்னர் ஜனாதிபதியாக இருந்து ஓய்வுபெற்றவர்கள் குறிப்பாக தற்போது சலுகைகள் இரத்தாகியிருக்கும் அனைவருமே ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேறிய பின்னரும் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தர்க்க ரீதியில் நோக்கினால் அரசாங்கத்தின் சலுகைகளை அனுபவித்துக்கொண்டு அதே அரசாங்கத்திற்கு எதிராக அணிதிரட்டல் மற்றும் ஏனைய அரசியல் நடவடிக்கைகளில் அவ்வப்போது ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இவர்களுக்கான சலுகைகள் ஏன் என்னும் கேள்வியில் நியாயமுண்டு.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது. அவரது வெகுசன கவர்ச்சி அதிகரிக்கவே அதிக வாய்ப்புண்டு. ஒன்று அவர் கூறியவாறு நடந்து கொள்கின்றார். அடுத்தது. அவர் ஏனையவர்கள் போன்று ஆடம்பரத்தையோ அதிகாரத்தையே ருசித்து வாழவில்லை என்றும் மக்கள் புரிந்து கொள்ளக்கூடும். தற்போதைய சூழலில் அநுரகுமார அலை என்று ஒன்றில்லாவிட்டாலும் கூட, அவருடைய செல்வாக்கிற்கு சவால்விடுக்கக் கூடிய ஒருவரை மக்கள் அறிய முடியாதவாறான சூழலே காணப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அவர்களின் செல்வாக்கை தக்கவைக்கக் கூடியவாறும் அதேவேளை, மக்கள் விரும்பக் கூடியவாறும் விடயங்களை நன்கு கச்சிதமாக நகர்த்துவதாகவே தெரிகின்றது. அதேவேளை ஜனாதிபதி சலுகைகளை இழந்தவர்கள் அதனை வைத்து மக்கள் அனுதாபம் தேடும் வழிகளும் பெருமளவிற்கு பயன்படும் என்றில்லை. மகிந்த தனது பழைய உக்தியையே மீண்டும் கைக்கொள்ள முயற்சிக்கின்றார். ஆனால், அது அவருக்கு பெருமளவிற்கு கைகொடுக்கும் என்றில்லை.

ஒரு வேளை அரசியலை முன்னெடுக்கும் ஆற்றலோடு மகிந்த இருந்தால் இதே போன்ற விடயங்களை ஓர் அரசியல் அலையாக மாற்றுவதில் மகிந்த கைதேர்ந்தவராக இருந்திருக்கக்கூடும். ஆனால், தற்போதைய அவருடைய இன்றைய நிலையில் அவருக்கு இவ்வாறான ஆட் திரட்டல் நகர்வுகள் பெரியளவில் கைகொடுக்கும் என்றில்லை. அத்துடன், சலுகைகளுக்காக மக்களிடம் கையேந்துவது ஓர் அனுதாப அலையை ஏற்படுத்தப் பயன்படுமா என்னும் கேள்வியும் உண்டு. தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் மக்களின் பணம் வீண் விரயமாவதை தடுக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என்னும் செய்தியையே அவர்கள் மக்களுக்கு வழங்குகின்றனர். மக்கள் அதனை ஆதரிக்கவே செய்வர்.

# பரந்தன் பஸ் நிலைய போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் தொடர்பில் ஆராய்வு

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பேருந்து நிலைய போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர், கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பரந்தன் பேருந்து நிலைய சேவைகள் மற்றும் அப்பகுதியில் ஏற்படும் வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

# மத்திய அரசு - உள்ளூராட்சி நிறுவனங்கள் இணைந்து செயல்பட்டால் மட்டுமே அபிவிருத்தி வேகமடையும்!

## ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 13

மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இணைந்து ஒருங்கிணைந்த முறையில் செயல்பட்டால் மாத்திரமே நாட்டின் அபிவிருத்தி வேகமடையும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுக்கான பூர்வாங்கக் கலந்துரையாடலில் அவர் இந்தக் கருத்துகளை தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள், மத்திய வங்கி மற்றும் பல அமைச்சுகளின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில், கல்வி, சுகாதாரம், நெடுஞ்சாலை உள்ளிட்ட துறைகளின் அபிவிருத்தித் திட்டங்களில் மத்திய மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையேயான பிரச்னைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, வெளிநாட்டு கடன்கள் மற்றும் உதவிகளின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இனி விசேட திட்ட அலுவலகங்கள் அமைக்கப்படாது என்றும், தற்போதைய நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் திட்டங்களை நிறைவு செய்யவேண்டும்என்றும்ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பாடசாலை கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களை வலய மட்டத்தில் ஆராய்ந்து, அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அரசியல் நோக்கத்துக்காக உள்ளூராட்சி நிறுவனங்களைப் பயன்படுத்தும் பழக்கம் தற்போதைய அரசாங்கத்தில் முடிவுக்கு வந்துவிட்டதாகவும், தேசிய அபிவிருத்தித் திட்டத்தை நோக்கிச் செல்வதற்கான பொறுப்பை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# தனிமையில் நின்ற யானை உயிரிழப்பு

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி - உருத்திரபுரம் நீவில் பகுதியில் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நிலையில் தனிமையில் நின்ற யானை உயிரிழந்தது.

கடந்த இரு நாட்களுக்கு முன் உருத்திரபுரம் பகுதியில் குளக்கரையில் குறித்த யானை தனித்து நின்றதை அவதானித்த பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்திய மீனவர் நால்வர் விடுதலை

கொழும்பு, செப். 13

இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட காக்கிநாடாவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் நால்வர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

படகில் ஏற்பட்ட பிரச்னை காரணமாகக் குறித்த கடற்றொழிலாளர்கள் நால்வரும் இலங்கை கடற்பரப்பில் நுழைந்தனர்.

அதன்போது காங்கேசன்துறை அருகே அவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இந்நிலையில் அவர்கள் அவர்களது சொந்தப் படகிலேயே திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இன்று காக்கிநாடாவை சென்றடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஊடாக கடற்றொழிலாளர்கள் நால்வரும் அனுப்பிவைக்கப்பட்டதாக காக்கிநாடா பாராளுமன்ற உறுப்பினர் டாங்கெல்ல உதய் ஸ்ரீனிவாஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



செப்ரெம்பர் - 13 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆவணி 28
நல்ல நேரம் : 07.31 - 09.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சப்தமி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். நிதானம் தேவைப்படும்.

**இடபம்**
யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். குடும்பத்தினரை அனுசரித்துப் போவீர்கள். சிக்கனமாக இருங்கள். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதிப் பெருகும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். மதிப்புக் கூடும்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**துலாம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். நன்மை கிட்டும்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அதிர்ஷ்டமான நாள்.

**தனுசு**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். திருப்தி உண்டாகும்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். சொந்த பந்தங்களின் சுயரூபத்தை அறிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

# அனுமதியற்ற கட்டடத்துக்கு ரூ. 49 இலட்சம் விலக்களிப்பு

## நகர அபிவிருத்தி அதிகார சபை மீது வவுனியா மாநகர சபை அதிருப்தி

வவுனியா, செப். 13

வவுனியா, வெளிக்குளம் பகுதியில் உள்ள அனுமதியற்ற கட்டடம் ஒன்றுக்கு 49 இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்ட நிலையில் அந்தத் தொகையை செலுத்தத்தேவையில்லை என நகர அபிவிருத்தி அதிகார சபை விலக்களிப்பு வழங்கியதாக வவுனியா மாநகர சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாநகர சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சு. காண்டீபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த முதல்வர், குறித்த பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு அனுமதியில்லாமல் அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பில் 49 இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

எனினும், அந்தத் தொகையை செலுத்தத் தேவையில்லை என நகர அபிவிருத்தி அதிகார சபையால் அந்த காலப்பகுதியில் விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில் அவ்வாறு வழங்கப்பட்டது எனக் கூறுமாறு மாநகர முதல்வர் என்ற வகையில் எனக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே, இது தொடர்பில் சபையின் கவனத்துக்கு கொண்டுவருவதுடன் சபை தீர்மானம் ஒன்றை எடுத்து இதனை ஆராய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

இது தொடர்பில் தீர்மானம் தேவையில்லை நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் விளக்கம் ஒன்றை கோரி சபை முதல்வரே அடுத்த கட்ட செயல்பாடுகளை மேற்கொள்ளலாம் என உறுப்பினர்களான முகமட் முனவ்வர் மற்றும் சு. விஜயகுமார் ஆகியோர் தெரிவித்தனர்.

உரிய நபர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சென்றால் நாமும் போகமுடியாது. எனவே, முழுச் சபையும் இதற்கு பொறுப்பல்ல என்று உறுப்பினர் முனவ்வர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக சபை முதல்வருக்கும் குறித்த இரு உறுப்பினர்களும் இடையில் நீண்ட வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இந்த நிலையில் சபைத் தீர்மானமாக இல்லாமல் எந்த அடிப்படையில் இந்தக் கட்டண விலக்களிப்பு வழங்கப்பட்டது என்பது குறித்து நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் விளக்கம் கோருவதற்கு முதல்வருக்கு சபை உறுப்பினர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (எ-10)

# மகாகவி பாரதியாரின் நினைவு தினம் யாழில்

யாழ்ப்பாணம், செப். 13

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் வட்டுக் கோட்டையில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நடைபெற்றது.

இதன்போது பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவுதின நிகழ்வில் சிவசேனையின் தலைவர், மறவன்புலவு க. சச்சிதானந்தம், பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ- 05)

# யாழில் வள்ளுவர் சிலை திறப்பு

யாழ்ப்பாணம், செப். 13

வலிகாமம் வடக்கு மாவிட்டபுரம் வள்ளுவர் சனசமூக நிலையத்தில் திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அஜித்குமாரின் தாயின் பிறந்த தினத்தை முன்னிட்டு கருங்கல்லினாலான வள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் சனசமூக நிலைய நிர்வாகத்தினர், கிராம மக்கள், சமூக செயல்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)



# மன்னாரில் 91 பறவைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது

மன்னார், செப். 13

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 91 பறவைகளை ஏற்றிச் சென்ற டிங்கி படகுடன் இரண்டு சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

மன்னார், பேசாலை - சிரிதோப்பு கடற்கரைப் பகுதியில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட படகிலிருந்து 72 புறாக்களையும் 19 சேவல்களையும் கடற்படையினர் மீட்டனர்.

சந்தேக நபர்கள் 17 மற்றும் 52 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் பேசாலை மற்றும் மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுடன் டிங்கி படகு மற்றும் பறவைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ)

# சங்கானையில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப். 13

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகமும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 16 ஆம் திகதி சங்கானை பிரதேச செயலகத்தில் காலை 08. 30 மணி தொடக்கம் பிற்பகல் 03.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இதன்போது பின்வரும் சேவைகள் வழங்கப்படவுள்ளன.

1. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள் (தேசிய அடையாள அட்டை).
2. ஓய்வூதியம் தொடர்பான சேவைகள்.
3. பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள்.
4. மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள்.
5. பிரதேச சபைகளால் வழங்கப்படும் சேவைகள்.
6. பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள்.
7. மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள்.
8. திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழிற் கல்வி வழிகாட்டல்கள்.
9. சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள்.
10. முதியோர் தேசிய செயலகத்தால் வழங்கப்படும் சேவைகள்.
11. காணி தொடர்பான சேவைகள்.
12. மருத்துவ முகாம் - பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை, இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் (வறியவர்களுக்கு).

போன்ற சேவைகள் இந்த நடமாடும் சேவையின்போது வழங்கப்படவுள்ளன. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகள் தேர்தல் திகதியை குறிப்பிட முடியாது

கொழும்பு, செப். 13

**மாகாண சபைகள் தேர்தலை நடத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இருப்பினும், தேர்தலை நடத்தும் திகதியை நிச்சயமாக குறிப்பிட முடியாது. சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டதன் பின்னர் தாமதமில்லாமல் மாகாண சபைகள் தேர்தலை நிச்சயம் நடத்துவோம் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.**


பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சாணக்கியனின் கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். இருப்பினும், தேர்தலை நடத்தும் திகதியை நிச்சயமாக குறிப்பிட முடியாது.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாண சபைகளை தொடர்ந்து நிர்வகிக்கும் நிலைப்பாட்டில் அரசாங்கம் இல்லை. பழைய தேர்தல் முறையிலும் தேர்தலை நடத்த முடியாது, புதிய தேர்தல் முறையிலும் தேர்தலை நடத்துவதில் சிக்கல் காணப்படுகிறது என்பதை அனைவரும் அறிவோம்.

மாகாண சபைகள் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்கு தீர்வு காண வேண்டிய அவசியம் காணப்படுகிறது. சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டதன் பின்னர் தாமதமில்லாமல் மாகாண சபைகள் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தலை பிற்போடும் நோக்கம் எமக்கு கிடையாது - என்றார்.

(ஐ)



# பாம்புகளுடன் பெண் கைது

கொழும்பு, செப். 13


சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பாம்புகளுடன் வர்த்தக பெண் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகளால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கொழும்பு - வாழைத்தோட்டம் பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவராவார்.

சந்தேக நபரான வர்த்தக பெண் இந்த பாம்புகளை தாய்லாந்தின் பேங்கொக் நகரத்தில் கொள்வனவு செய்து பின்னர் இந்தியாவுக்கு சென்று அங்கிருந்து நேற்றுமுன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரிடமிருந்து, 6 பாம்புகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)



# ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார் சீனத் தூதுவர்!

கொழும்பு, செப். 13

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சீன தூதுவர் கீ சென்ஹொங் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த சந்திப்பு கொழும்பு மலர் வீதியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பணிமனையில் நடைபெற்றது.

ரணில் விக்கிரமசிங்க உடல் நல குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் சந்திக்கும் உத்தியோகபூர்வ முதல் இராஜதந்திர சந்திப்பு இதுவாகும்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீனத் தூதருக்கும் இடையிலான கலந்துரையாடல் இலங்கையின் அரசியல் நிலைமை மற்றும் சர்வதேச மட்டத்தில் கவனம் செலுத்தியது.

இதேவேளை, விஜயராமை இல்லத்தில் இருந்து வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சீன தூதுவர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள 72 பாதாள குழுவினர் கைதாவர்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, செப். 13

வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாள குழுக்களின் 72 உறுப்பினர்களை கைது செய்வதற்கு சிவப்பு அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் நாட்டை விட்டு வெளியேறும்போதும் நாட்டுக்குள் வரும் போதும் அவர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்வதற்கு விசேட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள 556 பேரை தொடர்ச்சியாக கண்காணிக்க விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏதேனும் பகுதியில் குற்றச்செயல்கள் இடம்பெற்றால் துரிதமாக செயல்பட சகல பொலிஸ் நிலையங்களில் பொறுப்பதிகாரிகள் மற்றும் ஏனைய பாதுகாப்பு தரப்பினரை ஒன்றிணைந்து வட்ஸ் அப் செயலி ஊடாக விசேட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள், சோதனை சாவடிகள் போடப்பட்டு வாகனங்கள் சோதிக்கப்படுகின்றன.

இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 105 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன. இவற்றுடன் தொடர்புடைய 34 துப்பாக்கிதாரிகளும் ஒத்தாசை வழங்கியவர்கள் உட்பட 322 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், ரி - 56 ரக துப்பாக்கிகள் 58 உட்பட 1,698 துப்பாக்கி மற்றும் ஏனைய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன -என்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

(ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

சிலாபம், செப். 13

காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

புத்தளத்தில் - ஆனமடு - தெஹிகலயாய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஆனமடு பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயது நபராவார். இவர் தனது மகனுடன் சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்தபோது காட்டு யானை தாக்கி காயமடைந்தார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார்.

# கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை மூடும் திட்டம் அரசுக்கு இல்லை!

கொழும்பு, செப். 13

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை மூடுவதற்கு திட்டம் எதுவும் இல்லை என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.



கூட்டுத்தாபனத்தின் மொத்தக் கடன் தற்போது ரூ.60 கோடி எனவும் அது படிப்படியாகத் தீர்க்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

"இரண்டு ஆண்டுகளுக்குள் கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்படும் என நாங்கள் திறைசேரிக்கு உறுதியளித்துள்ளோம்" என்று நேற்றுமுன்தினம் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

(ஐ)

# தொழில்நுட்பத்திலிருந்து பிள்ளைகளை விலக்காதீர்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, செப். 13

பிள்ளைகளை தொழில்நுட்பத்திலிருந்து விலக்கி வைப்பது நமது பொறுப்பல்ல. மாறாக அறிவுபூர்வமாகவும் - விவேகத்துடனும் - ஆக்கபூர்வமாகவும் அதனைப் பயன்படுத்த அவர்களுக்கு வழிகாட்டுவதே நமது பொறுப்பு - இவ்வாறு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"சமமான அணுகல், எதிர்காலத்துக்கு ஏற்றதும் குழந்தைகளுக்குத் தாங்கிப் பிடிக்கக்கூடியதுமான ஒரு கல்வி முறையை அறிமுகப்படுத்துவதற்காக கல்வி அதிகாரிகள், கல்விமான்கள், அறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் கள் மற்றும் தனியார் துறை பங்காளிகள் ஆகியோர் உள்வாங்கப்பட்ட ஒரு செயலணியை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முன்முயற்சியை வலியுறுத்தினார்.

குழந்தைகளை தொழில்நுட்பத்திலிருந்து பாதுகாப்பது நமது பணியல்ல, மாறாக, அதனை புத்திசாலித்தனமாகவும் விமர்சன ரீதியாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தி வளர்ச்சிக்கு உதவும் ஒரு கருவியாக மாற்ற அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் - என்றார்.

(ஐ)

# ஆயுதங்கள் கடத்தலுக்கும் மன்னம்பேரியே தலைவர்!

## பொலிஸ் விசாரணைகளில் தகவல்

கொழும்பு, செப். 13

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சம்பத் மன்னம்பேரி கெஹல்பத்தர பத்மே நடத்திய போதைப்பொருள் உற்பத்தியின் நடவடிக்கையின் தலைவராக மட்டுமின்றி ஆயுத கடத்தல் வலையமைப்பின் தலைவராகவும் செயல்பட்டிருந்தார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனிடையே, சம்பத் மன்னம்பேரிக்கு சொந்தமான காணியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் உட்பட பல ஆயுதங்கள் ஏற்கனவே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பாதாள உலக குழுக்களுக்கு சொந்தமானவை என்றும் பொலி ஸாரால் நம்பப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கண்டுபிடித்து கைது செய்ய பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சம்பத் மன்னம்பேரியுடன் தொடர்புடைய நபர்களின் வீடுகளும் பொலிஸாரால் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருமலை முத்துநகர் விவசாயிகளுக்கு உரியதீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்"

கொழும்பு, செப். 13

**திருகோணமலை முத்துநகர் விவசாயிகளுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் கிழக்கு மாகாண மக்களின் குறிப்பாக முஸ்லிம் மக்களின் பிரச்னைகள் பற்றி பேசும்போது கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அதனை எவ்வாறு பொய்யென்று குறிப்பிட முடியும். அரசாங்கத்துக்கு எதிராக எதிர்கட்சியினர் சேறு பூசத் தேவையில்லை. ஆளும் தரப்பினரின் கருத்துக்களே அரசாங்கத்துக்கு சேறு பூசுவதாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பாராளுமன்ற அமர்வின் போது திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களில் முஸ்லிம் தாதியர்கள் மற்றும் பெண் சேவையாளர்கள் கலாசார ஆடையுடன் சேவையில் ஈடுபடக்கூடாது என்று பிராந்திய சேவை பணிப்பாளர் அறிவித்திருந்ததை சபையில் சுட்டிக்காட்டினேன்.

இந்த விடயத்தை நான் குறிப்பிட்டதன் பின்னர் ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பஸ்மி சரிப் நான் பொய்யுரைப்பதாகவும் அவ்வாறு ஏதும் நடக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலை மாவட்ட சுகாதார திணைக்கள ஊழியர் சங்க உறுப்பினர்கள் பிராந்திய சேவை பணிப்பாளரின் தீர்மானம் தொடர்பில் எனது அலுவலகத்துக்கு வந்து முறைப்பாடளித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் ஆதாரங்களை முன்வைத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் பிரச்னைகள் பற்றி நாங்கள் குறிப்பிடும்போது கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அதனை எவ்வாறு பொய், பிழை என்று குறிப்பிட முடியும். இன்று உங்களின் மாவட்டங்களில் பல பிரச்னைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு உங்களின் அரசாங்கத்துடன் பேசி தீர்வுகளை பெற்றுக்கொடுங்கள். எமது மாகாணத்தின் பிரச்னைகள் பற்றி நான் குறிப்பிட்ட விடயங்கள் பொய் என்பதை இந்த உறுப்பினர் நிரூபிக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு ஏதேனும் பாதிப்பு மற்றும் நெருக்கடி ஏற்பட்டால் அதற்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். அதனை விடுத்து முன்வைக்கப்படும் விடயங்கள் பொய் என்று குறிப்பிடக் கூடாது. இந்த உறுப்பினர் நாங்கள் அரசாங்கத்துக்கு சேறு பூசுவதாக குறிப்பிடுகிறார்.

முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான செயல்பாடுகளை சுட்டிக்காட்டும்போது ஆளும் தரப்பின் முஸ்லிம் உறுப்பினர்களே அதற்கு எதிராக பேசுகிறார்கள். இவர்களே அரசாங்கத்துக்கு சேறுபூசுகிறார்கள். கடந்த காலங்களில் அனைத்து சிறந்த விடயங்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்த நீங்கள் இன்று சமூக வலைத்தளங்கள் பற்றி பேசுகின்றீர்கள். யூ ரியூபர்களில் எத்தனை பேர் ஊடக ஒருங்கிணைப்பாளராக இந்த அரசாங்கத்தில் சம்பளம் பெறுகிறார்கள் என்பதை குறிப்பிட முடியுமா?

பல ஊடகங்கள் இந்த அரசாங்கத்துக்கு சார்பாகவே செயல்படுகின்றன. மக்கள் மிகத் தெளிவாகவுள்ளனர்.- என்றார். (எ)

# அருண் தம்பிமுத்துக்கு எதிரான நிதி மோசடி வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, செப். 13


அருண் தம்பிமுத்துக்கு எதிரான நிதி மோசடி வழக்கு விசாரணை அடுத்த மாதம் 09ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு தொடர்பான விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

புலம்பெயர் தமிழர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு அந்த பணத்தை தனது சொந்த தேவைக்காக மோசடி செய்தமைக்காக பணம் வழங்கிய புலம்பெயர் தமிழர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இலங்கையில் முதலீடுகளை செய்ய முனையும் புலம்பெயர் தமிழர்களை இவ்வாறு ஏமாற்றி மோசடி செய்வது எதிர்காலத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்பவர்களை அச்சமடைய செய்யும் என குறித்த வழக்கை தாக்கல் செய்த புலம்பெயர் தொழிலதிபரான கிறிஸ்டி குணரெட்ணம் தெரிவித்தார். (எ)

# மருத்துவபீட பீடாதிபதியாக சதானந்தன் மீண்டும் தெரிவு



மட்டக்களப்பு, செப். 13

கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதியாக மீண்டும் பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் சதானந்தன் கடந்த மூன்று வருடங்களாக இந்தப் பீடத்தின் பீடாதிபதியாக காத்திரமான சேவையாற்றி வந்தார்.

இந்த நிலையில் புதிய பீடாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் நடைபெற்றது.

இதில் பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன் தெரிவானார்.

# ரூ.10 ஆயிரம் இலஞ்சமாக பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது

## காரைதீவில் சம்பவம்

காரைதீவு, செப். 13

பிணை பெற்றுத்தருவதாக கூறி நபர் ஒருவரிடம் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தரை இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்தனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் தன்னிடம் 10,000 ரூபாய் இலஞ்சம் கோருவதாக பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட நபர் அண்மையில் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கூறியமைக்கு அமைவாக இலஞ்சப் பணத்தை காரைதீவு பொலிஸ் நிலையத்தில் வைத்து அந்த நபர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறுவேடத்தில் காத்திருந்த இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் இலஞ்ச பணத்தை வாங்கும் போது கைது செய்தனர்.

மேலும், அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவில் பொதுப்போக்குவரத்து செயல்பாட்டில் ஈடுபட்ட சாய்ந்தமருது பகுதியைச் சேர்ந்த நபரிடமிருந்து வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை பெற்றுக்கொண்டு வழக்குப் பதிவு செய்யாமல் அவற்றை மீளத் தருவதற்கு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் அந்த நபரிடமிருந்து 10, 000 ரூபாய் இலஞ்சம் கோரியிருந்ததாக ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (எ-01)

# கலமுதுன கிராமத்தில் வீதி அமைக்கும் திட்டம் ஓராண்டு காலம் ஒத்திவைப்பு

## கிராம மக்களை இடம்மாற்ற நடவடிக்கை

கண்டி, செப். 13

கண்டி மாவட்டம், மினிப்பே பிரதேசத்தில் உள்ள கலமுதுன கிராமத்துக்கு வீதியொன்று அமைப்பதை விட, அந்த கிராம மக்களை வேறிடத்துக்கு இடமாற்றம் செய்வது பொருத்தம் என முன்வைக்கப்பட்ட ஆலோசனையை கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழு ஏற்றுக்கொண்டது. இதன்படி, வீதி அமைப்புத் திட்டத்தை ஒரு வருடகாலத்துக்கு பிற்போடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில் பின்தங்கிய கிராமமான கலமுதுன கிராமத்துக்கு போக்குவரத்து வசதிகள் இல்லை என்பதால் அதனை ஏற்படுத்திக் கொடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை ஒருவருட காலத்துக்கு ஒத்திவைக்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளை கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழு ஏற்றுக்கொண்டது.

உடதும்பறை தொகுதியில் உள்ள மேற்படி கலமுதுன கிராமம் மிகவும் பின்தங்கிய ஒரு கிராமமாகும். சுமார் 6 கிலோ மீற்றர் தூரம் ஒற்றையடிப்பாதை மட்டுமே உள்ளது. எனவே அங்கு வாகனம் செல்லுமளவுக்கு பாதை அகலமாக்கப்பட வேண்டும் என நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இது தொடர்பில் பலமுறை மத்திய மாகாண சபை மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் போன்றவற்றில் எடுத்துக்காட்டப்பட்டு வந்தன. அங்கு பாதை அமைப்புக்கான திட்டம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஈ.எம். பசநாயக்க முன்வைத்த கருத்தை சபை ஏற்றுக் கொண்டது.

இதனடிப்படையில், கலமுதுன கிராமத்தில் 36 குடும்பங்கள் மட்டுமே வசிப்பதாகவும் அவற்றில் 5 அல்லது 6 குடும்பங்களுக்கு மட்டுமே காணி நிலங்கள் இருப்பதாகவும் ஏனையவர்கள் அவர்களில் தங்கி வாழ்பவர்கள்என்றும்சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன் அங்கு மொத்தமாக 200 ஏக்கர்களுக்கும் குறைவான அளவு காணிகளே பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனவே, சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு பாதை அமைத்து அவர்களுக்கான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் செலவை விட அவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் இருந்து உண்ணஸ்கிரிய நகர்ப் பக்கமாக கீழே அவர்களை நகர்த்தி அதற்கான காணிகளையும் வீடமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பது பொருத்தமானது என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். இதற்கு கிராம மக்களும் விருப்பம் தெரிவித்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சபையில் தெரிவித்தார்.

அவர்களை மலைக்கு மேலிருந்து கீழே இடமாற்றம் செய்தால் போக்குவரத்து, பாடசாலை, மின்சாரம் உட்பட பல அடிப்படை வசதிகளை புதிதாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது என்றும் அதற்கான வசதிகள் மலையின் கீழ்ப் பகுதியில் உள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் அரச காணிகள் கீழ்ப் பகுதியில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான காரணங்களால் மாவட்ட அபிவிருத்திக் குழு மேற்படி ஆலோசனையை ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

# கல்முனை மாநகர சபையில் ஊழல் தடுப்பு விசாரணை

கல்முனை, செப். 13

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பில் ஆராயும் முகமாக இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைவாய்ப்பு, முறையற்ற ஆட்சேர்ப்பு, வளங்கள் மீதான துஷ்பிரயோகம், முறையற்ற கேள்வி கோரல்கள், வாகனப் பராமரிப்பில் துஷ்பிரயோகம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

மேலும் கடந்த காலங்களில் குறித்த மாநகர சபையில் கடமையாற்றிய ஆணையாளர் உட்பட உயரதிகாரிகளின் அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் அவை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய ஆவணங்கள் உட்பட ஆதாரங்கள் திரட்டப்பட்டன. (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## பிறந்து...

விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-05)

## தமிழ்...

நடைமுறைப்படுத்தும் வகையில் விரைந்து மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியமை நீண்ட காலமாக இழுத்தடிக்கப்படும் மாகாண சபை தேர்தலை நடத்த வழிவகுக்கும் எனவும் தூதுவரிடம் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மன்னார் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு 600 மில்லியன் ரூபாய்களை வழங்கி அப்பிரதேச மக்களின் நீண்ட கால சுகாதாரத் தேவையை நிறைவு செய்ய இந்தியா முன்வந்தமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய விஷ்தரிப்பு மற்றும் தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து என்பவற்றில் இந்தியா தொடர்ந்தும் அக்கறையுடன் இருப்பதாகவும் விரைந்து அதை நிறைவேறுவதற்கான தொடர் முயற்சிகள் எடுக்கப்படுதாகவும் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதும் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதும் சமாந்தரமாக செயல்படுத்தப்படுவது அவசியம் எனவும் அதில் இந்தியா அக்கறையோடு இருப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றில் இந்தியா இதய சுத்தியோடும் உறுதியோடும் பயணிப்பதற்கு தமிழ் மக்கள் சார்பில் தாம் நன்றி கூறுவதாக ரெலோ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-05)

## அரசின்...

ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அவர்களது உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்நிலையில் சந்திரிக்காக பண்டார நாயக்க குமாரதுங்க எதிர்வரும் இரு மாதங்களுக்குள் வெளியேறவுள்ளார்.

தான் புதிதாக வசிக்கவுள்ள இல்லத்தின் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், குறித்த பணிகள் நிறைவடைந்தவுடன் தான் அங்கு சென்று வசிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விதிமுறைகளின்படி, அரசுக்கு சொந்தமான இல்லத்தில் வசிப்பவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டுமாயின் 3 மாத கால முன்கூட்டிய அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் என சுட்டிக் காட்டிய சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, தனக்கு இதுவரை அவ்வாறான எந்தவொரு அறிவிப்பும் கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இருப்பினும் தான் விரைவில் வெளியேற உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே, அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாடகையை செலுத்தி தனது வாழ்நாள் முழுவதும் தற்போதைய இல்லத்தில் வசிப்பதற்கு அனுமதி கேட்டு ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவுக்கு கடிதம் எழுதியதாகவும், ஆனால் அது மறுக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

15 ஆண்டுகளுக்குள் இரண்டு முறை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தான், வயதான காலத்தில் வீட்டை விட்டு வெளியேறுவது கடினமாக இருந்ததால், அதே இடத்தில் தங்கக் கோரியதாக அவர் கூறினார். (அ)

# ஐ.தே.க. மாநாடு 20ஆம் திகதி!

கொழும்பு, செப். 13

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறி ஜயவர்த்தனபுர கோட்டையில் அமைந்துள்ள மோனார்க் இம்பீரியல் ஹோட்டலில் குறித்த விழாவை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவு விழா ஏற்கனவே 6ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானித்திருந்த நிலையில், கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு கட்சியின் முகாமைத்துவக் குழு, விழாவை ஒத்திவைப்பதற்கு தீர்மானித்திருந்தது.

அதன் பிரகாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ உட்பட எதிர்க் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் வகையிலேயே சிறிகொத்தாவில் அல்லாமல் பொது இடத்தில் மாநாட்டை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## புலிகளுடன்...

குறிப்பாக சபையில் சில முஸ்லிம் தலைவர்கள் பேசும்போது கூட குரோதமான விடயங்கள் வெளிப்படுத்துவதை அண்மைக் காலமாக அவதானிக்க முடிகிறது.

நாட்டில் விடுதலைப்புலிகளின் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் 2001 ஆம் ஆண்டு தொடர்க்கம் 2006 ஆம் ஆண்டுவரை சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தபோது, அதன் அங்கமாக அப்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் அதில் இணைந்திருந்தார்.

அவர் கிளிநொச்சிக்கு வருகை தந்து விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்திருந்தார்.

இதன்போது, தனியான சமையல்காரரை அழைத்துவந்து பிரபாகரன், உரிய சமையலை செய்து வழங்கியிருந்தார்.

இந்த பின்னணியில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனாக இருக்கட்டும், முத்த தலைவர் தந்தை செல்வா முதல் இரா சம்பந்தன் வரை முஸ்லிம் மக்கள் தொடர்பில் மிக தெளிவான எண்ணங்களை தமிழர்கள் கொண்டுள்ளனர்.

மேலும் பெரும் விட்டுக்கொடுப்புக்களை முஸ்லிம்களுக்காக தமிழ் மக்கள் செய்திருந்தனர்.

எனினும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா, ஒரு நிகழ்வில் சில விடயங்களை கூறியிருந்தார்.

அதில் குறிப்பாக அம்பாறையில் உள்ள இந்துக்கோவிலை உடைத்ததாகவும், ஆயுதங்களை வாங்கி ஊர்காவற்படைக்கு வழங்கினேன் எனவும், ஜிகாத் என்ற அமைப்பை உருவாக்கினேன் என்றெல்லாம் வெளிப்படையாக பேசியிருந்தார். அப்படி இருந்தும் முஸ்லிம் சகோதரர்கள் மீது எவ்வித கோபங்களும் நாங்கள் கொண்டிருக்கவில்லை.

காரணம் யுத்த காலத்தில் இரு பக்கங்களுக்கும் நிறைந்த காயங்கள் உள்ளன. யாழிலும் கூட விடுதலைப் புலிகள் போராட்டத்தில் முஸ்லிம் சகோதரர்கள் போராடி மரணித் துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டக் காலத்தில் விடுதலைப் புலிகளிேளாடு இணைந்து முஸ்லிம்களும் போராடியிருக்கின்றனர். வீரச்சாவடைந்திருக்கிறார்கள்.

இவ்வாறு உள்ள பின்னணியில் தற்போது சில முஸ்லிம் சகோதரர்கள் விரோத போக்கை கொண்டு செயல்படுகின்றனர் - என்றார். (அ)

# வாக்காளர் இடாப்பு திருத்தும் பணிகள் இறுதிக் கட்டத்தில்!

கொழும்பு, செப். 13

வாக்காளர் பட்டியலை திருத்தும் பணி தற்போது இறுதிக் கட்டத்தில் இருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாவட்ட அளவில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறித்து மாவட்டங்களுக்குப் பொறுப்பான உதவித் தேர்தல் ஆணையாளர்கள் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், 2025 ஆம் ஆண்டிற்கான பிரதான வாக்காளர் பட்டியலை சான்றளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# மாகாண சபைகளில் 61,835 பதவி வெற்றிடம்

### 35 ஆயிரம் பட்டதாரிகளை சேர்க்க முடிவு

கொழும்பு, செப். 13

மாகாண சபைகளில் பல்வேறு பதவிகளுக்காக 61 ஆயிரத்து 835 வெற்றிடங்கள் உள்ளன என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இவற்றில் அதிகபட்சமாக 16,651 வெற்றிடங்கள் மேல் மாகாண சபையில் நிலவுகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்த வெற்றிடங்களை நிரப்ப ஆட்சேர்ப்பு முயற்சிகள் நடக்கின்றன. நாடு தழுவிய சேவைகளுக்கு ஆயிரம் பல்கலைக்கழக பட்டதாரிகள் ஏற்கனவே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஆயிரம் பேரை பணியமர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அரச துறையை வலுப்படுத்தும் ஒரு பரந்த நடவடிக்கையாக, 35 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

## மன்னார் காற்றாலை...

குறித்து முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் தொடர்பாக ஜனாதிபதியால் ஒரு மாத காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. குறித்த காலக்கோடு இன்று (நேற்று) முடிவடைகின்றது.

ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து எமது போராட்டத்தின் பலனாக நல்ல முடிவு வரும் என எதிர்பார்த்து காத்திருந்தோம்.

இதுவரை எந்த முடிவுகளும் ஜனாதிபதியிடம் இருந்து எமக்கு கிடைக்கவில்லை. பல தடவைகள் நாங்கள் மன்னார் மாவட்ட செயலகத்துடன் தொடர்புகொண்டு கடந்த 30 நாட்களுக்குள் நடந்த செயற்திட்டங்கள் குறித்து கேட்டறிந்ததோடு, எமக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படாமை குறித்து தெரிவித்தோம்.

எனினும் தமக்கும் எவ்வித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என்ற பதில் எமக்கு கிடைத்தது. நாங்கள் முக்கிய மூன்று கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு முன்வைத்தோம்.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் 04 காற்றாலைகள், மேலும் அமைக்கப்படவுள்ள 10 காற்றாலை வேலைத்திட்டங்களும் உடன் நிறுத்தப்பட்டு, குறித்த திட்டம் வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து கனிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்படக்கூடாது. தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கையும், மன்னாரில் ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்ட காற்றாலைத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை உடன் நிவர்த்தி செய்து பாதிக்கப்பட்ட மக்களை துயரங்களில் இருந்து விடுவிக்கவேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளையும் நாங்கள் போராட்டக் குழு சார்பாக ஜனாதிபதியிடம் முன் வைத்தோம்.

தற்போது குறித்த போராட்டம் 41 நாளை கடக்கின்றது. இதுவரை அரச தரப்பில் இருந்து எங்களுக்கு சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

எங்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். எங்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிய முறையில் உறுதிமொழி தந்தால் இப்போராட்டம் கைவிடப்படும்.

நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். காற்றாலைத் திட்டத்துக்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால் மன்னார் மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழிடத்தையும் பாதிக்கின்ற எந்த திட்டமும் எமக்கு வேண்டாம்.எனவே அரசாங்கம் எமது கோரிக்கைகளை ஏற்று செவிசாய்க்க வேண்டும். இல்லை என்றால் எமது போராட்டம் வேறு திசைகளில் விரிவடையும்.

மன்னார் மாவட்டம் ஒரு போர்க்களமாக மாற்றமடையும் என்பதை இந்த அரசுக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த போராட்டம் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டமும் இல்லை. அரசின் கட்சிக்கு எதிரானதும் இல்லை. மாறாக எமது உரிமைக்கான போராட்டமாக அமைந்துள்ளது.

எமது வாழ் விடங்களையும் வளங்களையும் பாதுகாப்பதற்கான உயர்ந்த ஒரு போராட்டமாக அமைந்துள்ளது - என்றார். (அ)

## அத்துரலிய...

விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அபே ஜன பலய கட்சிக்கு ஒதுக்கப்பட்ட தேசிய பட்டியல் ஆசனத்தைப் பெறுவதற்காக, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் வேதனிகம விமல திஸ்ஸ தேரரை கடத்தி அச்சுறுத்தினார் என்று ரத்ன தேரர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

## கைதாகுவாரா...

குற்றப் புலனாய்வுப் பிரிவு சார்பில் முன்னிலையான பதில் சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வா, மனுதாரரை கைது செய்வது குறித்து சி.ஐ.டி. இன்னும் எந்த முடிவு எடுக்கவில்லை என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

விசாரணைகள் இன்னும் நடந்து வருவதாகவும், அதன் பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அதன்படி, மனுவை பரிசீலிப்பதை மேன்முறையீட்டு நீதிமன்றம் செப்ரெம்பர் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஜனநாயக நாடுகளின் தரவரிசை; முன்னேற்றம் கண்டது இலங்கை!

கொழும்பு, செப். 13

**உலகளாவிய ஜனநாயக செயல்திறனில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இதன்படி, சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவி நிறுவனம் வெளியிட்ட உலகளாவிய ஜனநாயக நிலை 2025 அறிக்கையின் பிரதிநிதித்துவ பிரிவில் இலங்கை 15 இடங்கள் முன்னேறியுள்ளது.**

2024 ஆம் ஆண்டில் அமைதியான முறையில் நடத்திமுடிக்கப்பட்ட ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து இந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சட்டத்தின் ஆட்சிப் பிரிவின் கீழ் முக்கிய குறிகாட்டிகளாக கணிக்கக்கூடிய அமுலாக்கம் மற்றும் தனிப்பட்ட ஒருமைப்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றில் இலங்கையின் ஆதாயங்களுக்கு பங்களித்த தேர்தல்களின் நம்பகத்தன்மை மற்றும் அமைதியான செயல்படுத்தலுக்காக பரவலாகப் பாராட்டப்பட்டது.

ஆசியா மற்றும் பசிபிக் பகுதியில் 43 நாடுகள் சரிவைக் கண்ட போதிலும், பத்திரிகை சுதந்திரத்தில் முன்னேற்றம் அடைந்த இரண்டு நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பதை அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

பிராந்தியத்தில் பரந்த ஜனநாயக சவால்களுக்கு மத்தியில் இந்த முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் ஒட்டுமொத்த செயல்திறன் நடுத்தர அளவில் இருந்தாலும், ஜனநாயக ஒருங்கிணைப்பு என்பது ஊழல் எதிர்ப்பு, நிறுவன சீர்திருத்தம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் புதிய அரசாங்கத்தின் திறனைப் பொறுத்தது என்பதை அறிக்கை வலியுறுத்துகிறது.

இந்த அறிக்கை 174 நாடுகளை மதிப்பாய்வு செய்ததுடன், அவற்றில் பாதிக்கும் மேற்பட்டவை ஜனநாயகத்தின் குறைந்தபட்சம் ஒரு பகுதியிலாவது சரிவைக் காட்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## சஷீந்திரவுக்கு மீளவும் மறியல்

கொழும்பு, செப். 13

ஊழல் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 19ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் கொழும்பு பிரதம நீதிவான் அசங்க. எஸ். போதரகம இந்த உத்தரவை பிறப்பித்தார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, மகாவலி அதிகார சபையின் காணியில் கட்டப்பட்ட தமது அரசியல் பணிமனையை போராட்டக்காரர்கள் அழித்தமைக்கு இழப்பீடாக 88 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை சட்டவிரோதமாக பெற்றிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாமலுக்கு எதிரான வழக்கை விசாரிக்க உயர்நீதிமன்று அனுமதி!

கொழும்பு, செப். 13

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமணத்தில் பயன்படுத்தப்பட்ட மின் கட்டணத்தை இலங்கை மின்சார சபைக்கு சரியான நேரத்தில் செலுத்தத் தவறியதால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன என்று தீர்ப்பளிக்கக் கோரி சட்டத்தரணி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதியளித்தது.

இந்த மனுவை சட்டத்தரணி விஜித குமார தாக்கல் செய்துள்ளார். அதில், பிரதிவாதிகளாக இலங்கை மின்சார சபை உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த மனு உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் பிரீதிபத்மன் சூரசேன மற்றும் நீதியரசர் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வெரகொட, நாமல் ராஜபக்ஷவின் திருமணத்திற்கான மின்சாரக் கட்டணத்தை இலங்கை மின்சார சபைக்கு சரியான நேரத்தில் செலுத்தத் தவறியது தொடர்பாக மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த மின்சார கட்டணம் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டதால், இந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒரே விடயம், சம்பந்தப்பட்ட நடவடிக்கை மூலம் பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான அறிவிப்பு மட்டுமே என்று சட்டத்தரணி கூறினார்.

பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், குறித்த மின்சாரக் கட்டணம் ஏற்கனவே செலுத்தப்பட்டு விட்டதாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த அமர்வு, மனுவை விசாரிக்க அனுமதி வழங்கியது.

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் திருமணத்தில் பயன்படுத்தப்பட்ட மின்சாரத்துக்கு இலங்கை மின்சார சபைக்கு 20 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணம் செலுத்த வேண்டியிருந்தது. நீண்ட காலம் இந்தக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மகிந்தவை கைது செய்ய நடவடிக்கை முன்னெடுப்பு

கொழும்பு, செப். 13

முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

அவர், விவசாய அமைச்சராக இருந்தபோது "தேசிய விவசாயிகள் வாரம்" ஏற்பாடு செய்ததில் நடந்ததாகக் கூறப்படும் மோசடி மற்றும் ஊழல் குறித்தும் சபாநாயகராக இருந்த காலத்தில் வாகனங்களை தவறாகப் பயன்படுத்தியது தொடர்பாகவும் பெறப்பட்ட முறைப்பாடுகள் குறித்தும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் சிறப்பு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

மகிந்த யாப்பா அபேவர்த்தன 3 கோடியே 63 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் நிதி மோசடி செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதாக பத்திரிகையாளர் சிறீலால் பிரியந்த தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

இந்த விசாரணைகளின் முன்னேற்றத்தைப் பொறுத்து, பொது சொத்துச் சட்டத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை கைது செய்யும் என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

## இலங்கை பழைய நிலைக்கு வேகமாகத் திரும்புகின்றது!

### உலக வங்கி தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தனது பழைய நிலைக்கு வேகமாகத் திரும்பி வருவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய நிதி ஒப்பீடுகளை செய்துள்ளதாகவும் 2021ஆம் ஆண்டு முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 8 சதவீதத்துக்கு சமனானது என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் உறுப்பு நாடுகளில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் மதிப்பாய்வின் ஊடாக அனைத்து இலங்கையர்களுக்கும் அரச நிதி செயல்பாடுகளை உரிய முறையில் செயல்படுத்தக்கூடிய நிலையில் இலங்கை திகழ்கிறது என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# கிராமங்களில் பாலங்கள் அமைக்க மேலும், 7.3 இலட்சம் யூரோ மானியம்

கொழும்பு, செப். 13

இலங்கையில் நடந்து வரும் கிராமப்புற பாலங்கள் வடிவமைப்பு மற்றும் கட்டுமான திட்டத்தை ஆதரிப்பதற்காக நெதர்லாந்து 7 இலட்சத்து 30 ஆயிரம் யூரோ - நம் நாட்டு மதிப்பில் சுமார் 25.7 கோடி ரூபாய் மானியத்தை அங்கீகரித்துள்ளது.

இந்த நிதி திட்டத்தின் கூடுதல் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மேம்பாட்டு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும்.

இலங்கை முழுவதும் 162 கிராமப்புற பாலங்களை நிர்மாணிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது, இது இயக்கம், நகர்ப்புற - கிராமப்புற இணைப்பு மற்றும் கிராமப்புற சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிறது.

இந்த திட்டம் தற்போது 96 வீதம் இயற்பியல் முன்னேற்றத்தை அடைந்துள்ளதோடு 151 பாலங்களின் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. திட்டத்தின் முடிவைக் குறிக்கும் வகையில், திட்டமிடப்பட்ட அனைத்து பாலங்களின் கட்டுமானமும் பெப்ரவரி 2026இற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்காக 4 கோடியே 18 இலட்சம் கடன் ஒப்பந்தத்தில் நெதர்லாந்து கையொப்பமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசின் தீர்மானம் கவலை தருகிறது!

கொழும்பு, செப். 13

பெருந் தோட்டத்துறைக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை கலைக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் கவலையளிக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"மலையக சமூகம் மிக நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் குறித்த அதிகார சபை நிறுவப்பட்டது. இந்த நிலையில், மலையக அபிவிருத்தி அதிகார சபையை நீக்குவது வரலாற்று ரீதியில் ஒதுக்கப்பட்டுள்ள சமூகத்தின், அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை வலுவிழக்கச் செய்யும்.

எனவே, குறித்த தீர்மானம் தொடர்பில் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, தீர்மானத்தை மீள பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் பதவிட்டுள்ளார். (ஐ)

# புலம்பெயர் தமிழருக்காகவே மகிந்த வெளியேற்றப்பட்டார்

### சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

பிரிவினைவாத புலம்பெயர் தமிழரை திருப்திப்படுத்துவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரச மாளிகையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மகிந்த ராஜபக்ஷவை அரச மாளிகையில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் பிரிவினைவாத புலம்பெயர் தமிழரே திருப்தியடைவார்கள். அவர்களுக்கே இன்றைய நாள் மகிழ்ச்சியை தரும் நாளாகும். அவர்களை திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் சாதாரண நபர் கிடையாது. முழு உலகமுமே தோற்கடிக்க முடியாது எனக் கூறிய புலிகள் அமைப்பை தோற்கடித்து 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்தவர்.

மக்களுக்கு வாழும் உரிமையை வழங்கிய தலைவர் அவர். நாட்டில் அபிவிருத்திகளை ஏற்படுத்தினார். இப்படிப்பட்ட தலைவருக்கு இவ்வாறா நன்றிகடன் செலுத்துவது?" - என்றார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org